செ.வெ.எண் 671 **செய்திக்குறிப்பு** நாள் 16-08-08

தற்கால அறிவியல் நூல்கள், நவீன வெளியீடுகள், வரலாற்றுப் பின்னணி கொண்ட புனைவுகள் மற்றும் மேற்கோள் தொகுப்புகள் போன்றன சாதாரண மக்களுக்கும் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கும் எட்டாக் கனியாக இருக்கும் நிலையை மாற்றிட, இவை அனைத்தும் அவர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்யும் வகையில், சர்வதேச தரத்திலான நூலகம் சென்னையில் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2007–08 ஆம் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தார்கள்.

சென்னை கோட்டூர்புரம், காந்தி மண்டபச் சாலையில் அரசு தகவல் தொகுப்பு விவர மைய வளாகத்தின் பின்புறம் 8 ஏக்கர் நிலத்தை நூலக வளாகம் கட்ட அரசு ஒதுக்கியுள்ளது. இவ்விடத்தில் ரூ.120 கோடி செலவில் அரசு நூலக வளாகம் அமையவுள்ளது. இந்நூலக வளாகம் கட்டுவதற்கு ஆகும் செலவினத்தில் 80 விழுக்காடு நூலக நிதியும் 20 விழுக்காடு அரசு நிதியும் பயன்படுத்தப்படும்.

சர்வதேச தரத்திலான இந்நூலக வளாகத்தை சி.ஆர்.நாராயணராவ், சென்னை என்ற கட்டடக்கலை நிறுவனம் வடிவமைத்துள்ளது.

அரசு நூலக வளாகத்தில் அமையவுள்ள நூலகக் கட்டடம் 3,33,140 சதுர அடியில் 8 மாடிகள் கொண்டதாக அமையும். இந்நூலகத்தின் தரைத்தளத்தில் நிர்வாகப் பிரிவு, வரவேற்பு அறை, இணையதளப் பிரிவு, பார்வையற்றோர் பிரிவு, பொருள் வைப்பு அறை மற்றும் பாதுகாவலர் அறை ஆகியவையும், முதல் தளத்தில் குறிப்புதவி, நாளிதழ் மற்றும் பருவ இதழ் பிரிவு, குழந்தைகள் பிரிவும், இரண்டாம் தளத்தில் தமிழ் நூல் பிரிவும் மூன்றாம் தளத்தில் ஆங்கில நூல் பிரிவும், நான்காம் தளத்தில் திராவிட மொழிகள் (தமிழ் தவிர) மற்றும் இதர இந்திய மொழிகள் பிரிவும், ஐந்தாம் தளத்தில் பழைய நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ் பிரிவும், ஆறாம் தளத்தில் அரசு ஆவணங்கள் பிரிவும், ஏழாம் தளத்தில் நன்கொடை நூல்கள் மற்றும் ஒளி, ஒலி பிரிவும், எட்டாம் தளத்தில் அரிய நூல்கள், நூல்கள் பாதுகாப்பு, புகைப்பட நூலகம் மற்றும் மின்னனு நூலகம் ஆகியவையும் அமையும்.

நூலகத்தின் அனைத்து தளங்களிலும் வாசகர்கள் அமர்ந்து படிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 1,200 பேர் அமர்ந்து படிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. 11.5 இலட்சம் நூல்களைப் பராமரிக்க, வசதியுடன் இந்நூலகக் கட்டடம் அமையும்.

9,365 சதுர.அடி பரப்பில் பயனீட்டுப் பிரிவும், 11,329.97 சதுர.அடி பரப்பில் நூல் கட்டுமானப் பிரிவு (Binding Section) மற்றும் பண்டகசாலை (Store Room), 7,700 சதுர.அடி பரப்பில் உணவகம் மற்றும் விடுதி ஆகியவை தனித்தனிக் கட்டடத் தொகுப்பாக இடம்பெறும்.

இவை தவிர இவ்வளாகத்தில் 42,630 சதுர.அடி பரப்பில் 1280 நபர்கள் அமரக்கூடிய கலையரங்கமும், அக்கலையரங்கத்தின் மேல்தளத்தில் திறந்தவெளி கலையரங்கமும் அமைய உள்ளது. இந்நூலக வளாகத்தில் 3,75,770 சதுர அடி பரப்பளவில் கட்டடங்கள் அமைய உள்ளன.

அரசு நூலக வளாகம் கட்ட 25.07.2008 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி நாளிதழ்களில் விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒப்பந்தக்காரர் அக்டோபர் முதல் வாரத்தில் தேர்வு செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் இரண்டாவது வாரத்தில் தொடங்கும். அதனைத் தொடர்ந்து 18 மாத காலத்திற்குள் (ஏப்ரல் 2010 க்குள்) நூலக வளாகம் கட்டி முடிக்கப்படும்.

இச்சிறப்புமிக்க நூலக வளாகத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா 16.08.2008 அன்று மாலை 5.00 மணிக்கு சென்னை கோட்டூர்புரம், காந்தி மண்டபம் சாலையில் அமைந்துள்ள அரசு தகவல் தொகுப்பு விவர மைய வளாகத்தின் பின்புறம் அரசு நூலக வளாகம் அமையவுள்ள இடத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசு நூலக வளாகத்திற்கு அடிக்கல் நாட்டி சிறப்புரை ஆற்றினார்கள்.

மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு மத்திய கப்பல், தரைவழி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பாலு, மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் மற்றும் மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு வரவேற்புரையும் தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., அவர்கள் நன்றியுரையும் நல்கினர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9